# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2009 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, நாடற்ற ஆட்களுக்குப் பிரசாவுரிமை வழங்குதல் (சிறப்பேற்பாடுகள்) (திருத்தச்) சட்டம்

---

*(2009 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 18 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---


*2009, பெப்புருவரி மாதம் 20 ஆந் தேதிய* ***இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்*** II *ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 6.00** **தபாற் செலவு : ரூபா 5.00**

**2009 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, நாடற்ற ஆட்களுக்குப் பிரசாவுரிமை வழங்குதல் (சிறப்பேற்பாடுகள்) (திருத்தச்) சட்டம்**

[2009 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 18 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]

ச. வ. ஒ. 61/2007

**1988 ஆம் ஆண்டின் 39 ஆம் இலக்க, நாடற்ற ஆட்களுக்குப் பிரசாவுரிமை வழங்குதல் (சிறப்பேற்பாடுகள்) சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

சுருக்கப் பெயர்.

**1**. இச்சட்டம், 2009 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, நாடற்ற ஆட்களுக்குப் பிரசாவுரிமை வழங்குதல் (சிறப்பேற்பாடுகள்) (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

1988 ஆம் ஆண்டின் 39 ஆம் இலக்கச் சட்டத்தில் 2அ என்னும் பிரிவைப் புகுத்துதல்.

**2**. (இதனகத்துப் பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும் 1988 ஆம் ஆண்டின் 39 ஆம் இலக்க, நாடற்ற ஆட்களுக்குப் பிரசாவுரிமை வழங்குதல் (சிறப்பேற்பாடுகள்) சட்டம் அச்சட்டத்தின் 2 ஆம் பிரிவை உடனடுத்து அச்சட்டத்தின் 2அ பிரிவாக பயனுறும் பின்வரும் புதிய பிரிவை உட்புகுத்துவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :-

"குறித்த சில ஆட்களுக்கு பிரசாவுரிமை வழங்குதல்.

2அ. இரண்டாம் பிரிவின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும் 1964 ஆம் ஆண்டு ஒத்தோபர் 30 ஆந் தேதியன்று இந்திய வம்சாவழியினரான இலங்கையில் நிரந்தர வாசியாக வசித்தவரும் அவரின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட சூழ்நிலை காரணமாக -

(அ) இலங்கையை விட்டு வெளியேறுமாறு நிர்ப்பந்திக்கப்பட்டவரும் ; அத்துடன்

(ஆ) அதன்மேல் இந்தியாவில் வதிந்துள்ளவரும்,

அதன் விளைவாக இச்சட்டம் நடைமுறைக்கு வரும் தேதிக்கு உடன் முந்திய நாளன்று 2 ஆம் பிரிவின் (அ) பந்தியின் தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுக இயலாதுள்ளவருமான எவரே

னும் ஆள் அப்பிரிவின் (ஆ) மற்றும் (இ) என்னும் பந்திகளின் தேவைப்பாடுகளை திருப்திசெய்வாரா யின் அல்லது இந்திய வம்சாவழியினராக இலங்கையில் நிரந்தரவாசியாக வசித்துள்ளவரான ஆளின் சந்ததியினரென எண்பிப்பை சமர்ப்பிப் பதற்கு இயலுமானவராயின் அத்தகைய ஆள் இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்து இலங்கைப் பிரசை என்ற அந்தஸ்தைக் கொண்டிருத்தல் வேண் டும் என்பதுடன் இலங்கையின் ஏனைய பிரசை, சட்டத்தினால் எந்த உரிமைகளுக்கும் சிறப்புரிமை களுக்கும் உரித்துடையவர்களாயிருக்கின்றாரோ அந்த எல்லா உரிமைகளுக்கும் சிறப்புரிமைக ளுக்கும் உரித்துடையவராதலும் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 4 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**3**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 4 ஆம் பிரிவு அதன் (1) ஆம் உட்பிரிவில் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) "2 ஆம் பிரிவின் ஏற்பாடு காரணமாக" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "2 ஆம் பிரிவு அல்லது 2அ என்னும் பிரிவின் ஏற்பாடுகள் காரணமாக" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலம் ;

(2) "படிவத்தில் பொருளளவில் இருத்தலும் வேண்டும்." என்னும் சொற்களுக்குப் பதிலாக, "படிவத்தில் பொருளளவில் இருத்தலும் வேண்டும் :

ஆயின், எவ்வாறாயினும், 2அ என்னும் பிரிவின் ஏற்பாடுகளின்கீழ் இலங்கைப் பிரசை என்ற அந்தஸ்திற்கு உரித்துடையவராகும் எவரேனும் ஆள், இலங்கையில் நிரந்தரமாக வதியும் உட்கருத்துடன் இலங்கைக்கு அவர் வருகை தருவதன்மீது மாத்திரமே இச்சட்டத்தின்கீழ் பிரசாவுரிமைச் சான்றிதழொன்றுக் கென விண்ணப்பித்தல் வேண்டும்." என்னும் சொற்க ளையும் எண்ணையும் இடுவதன் மூலமும்.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**4.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும்பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்